பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 04 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தமிழ் மொழி மற்றும் தமிழர் பாரம்பரியம் உலகெங்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் 11 லட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- வேலூர் மாவட்டம், காட்பாடியில் சிப்காட் தொழிற்பேட்டை விரைவில் ஏற்படுத்தப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக திரு. **M.A.Baby** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- கூடைப்பந்து போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியா 76வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<<**

தமிழ் மொழி மற்றும் தமிழர் பாரம்பரியம் உலகெங்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் பாலத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் தமக்கு எழுதும் கடிதங்களில் தமிழில் கூட கையெழுத்திடுவது கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மோடி (1) 34 செகண்ட்ஸ்)

மருத்துவ படிப்புகளை தமிழில் கற்பிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

(சவுண்ட் பைட் - மோடி (2) 61 செகண்ட்ஸ்)

புதிய பாம்பன் பாலம் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் - மோடி (3) 52. செகண்ட்ஸ்)

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்திருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மோடி (4) 49 செகண்ட்ஸ்)

இந்த நிகழ்ச்சியில் பேசிய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்கான நிதிஒதுக்கீடு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், தமிழகத்தின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த பத்தாண்டுகளில் 11 லட்சம் கோடி ரூபாயை வழங்கியுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 52 செகண்ட்ஸ்)

இந்த நிகழ்ச்சியில் ராமேஸ்வரம் - தாம்பரம் இடையேயான புதிய ரயில் சேவையை தொடங்கி வைத்த பிரதமர், 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்தார். ராமேஸ்வரம் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட திரு. நரேந்திர மோடி பின்னர், மதுரை சென்று அங்கிருந்து புதுதில்லி புறப்பட்டார்.

>>>>><<<<<<

வேலூர் மாவட்டம், காட்பாடியில் சிப்காட் தொழிற்பேட்டை விரைவில் ஏற்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு. துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம், காங்கேயநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடையும் வகையில் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை விரைவில் திறக்கப்படும் என்றும் திரு. துரைமுருகன் தெரிவித்தார்.

>>>>><<<<<<

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக திரு. **M.A.Baby** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மதுரையில் நடைபெற்ற அக்கட்சியின் தேசிய மாநாட்டில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உட்பட தலைவர்கள் பலர் திரு. **M.A.Baby**–க்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<<

அஇஅதிமுக-வில் எவ்வித குழப்பமும் இல்லை என்று அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. வைகை செல்வன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், கோனேரிக்குப்பத்தில் நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பல சோதனைகளை கடந்து வந்த இயக்கம் அஇஅதிமுக என்றும் திரு. வைகை செல்வன் தெரிவித்தார்.

>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உரிய ஆவணங்களின்றி பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 500 கிலோ ரேஷன் அரிசியை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

>>>>><<<<<<

திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவில் சித்திரை தேர் திருவிழாவிற்கான கொடியேற்றம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

கூடைப்பந்து போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியா 76வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆசிய கோப்பை தகுதிச் சுற்று போட்டியில் கிடைத்த வெற்றி காரணமாக கூடுதல் புள்ளிகளை பெற்ற இந்தியா 76வது இடத்திற்கு முன்னேறியது.

>>>>><<<<<<

**Havirov** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Payas Jain** வெற்றி பெற்றார்.

>>>>><<<<<<

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<